விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 186 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 09 செவ்வாய்க்கிழமை (23.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சிறை செல்ல வேண்டிய தரப்பினரே அரசுக்கு எதிராக ஒன்றிணைவு

### அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி



(கொழும்பு)

சிறைக்குச் செல்ல வேண்டிய தரப்பினரே தற்போதைய அரசுக்கு எதிராக ஒன்றிணைந்து அரசியல் கூட்டணி அமைத்துள்ளார்கள் என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரை 15ஆம் பக்கம் பார்க்க

## வட்டுக்கோட்டையில் குடும்பஸ்தர் மீது கத்தியால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வழக்கம்பரைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மீது கத்தியால் மேற்கொண்ட 15ஆம் பக்கம் பார்க்க

## கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் பயங்கரவாதச் சட்டம் விரைவில் நீக்கப்படும்

### ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு



(கொழும்பு)

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கடும் விமர்சனங்களுக்குள்ளாகியிருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் விரைவில் நீக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி வெடித்ததில் இராணுவ வீரர் மரணம்

### மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இராணுவ வீரர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

மன்னார் பிரதான பாலத்திற்கு அருகில் அமைந்துள்ள இராணுவ 15ஆம் பக்கம் பார்க்க


## யாழில் நீண்ட வரிசை



02ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச சட்டங்களுக்கு இணங்க இலங்கை எப்போதும் செயற்படும்

### அமெரிக்க பிரதிநிதியிடம் அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

இலங்கை எப்போதும் நடுநிலையாகவும் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டும் செயற்படும் என அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளரிடம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் குறிப் 15ஆம் பக்கம் பார்க்க

## புதிதாக 7 என்புக்கூடுகள் செம்மணியில் அடையாளம்




(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதிதாக 7 என்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 31 ஆம்நாள் அகழ்வுப் பணிகள் 15ஆம் பக்கம் பார்க்க

## பரந்தன் வீதியில் விபத்து குடும்பஸ்தர் மரணம்



(பரந்தன்)

முல்லைத்தீவு - பரந்தன் வீதி கைவேலிப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

இதில் 15ஆம் பக்கம் பார்க்க

உங்கள் வலம்புரியில்

## தரிசனம் 2

இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

உள்ளே...

## தருமபுரம் பொலிஸ் பிரிவில் கிணற்றில் தவறிவிழுந்த 2 வயதுச் சிறுமி உயிரிழப்பு



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறுப் பகுதியில் பாதுகாப்பற்ற கிணற்றில் தவறிவிழுந்த 2 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி நேற்று மதியம் அயல் வீட்டில் விளையாடிக் 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யானை தாக்கியதில் இருவர் உயிரிழப்பு

(இரத்தினபுரி)

இரத்தினபுரி - இறக்குவானை ஸ்ரீஉபயதிலகாராம விகாரையின் 78 ஆவது பொசன் பெரஹராவிற்காக அழைத்துச் செல்லப்பட்ட யானையொன்று தாக்கியதில், அதன் பாகனும் அவரது உதவியாளரும் உயிரிழந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்ற பெரஹராவிற்காக இரண்டு யானைகள் அழைத்து வரப்பட்டு விகாரைக்கு அருகில் கட்டப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று (22) காலை இந்த யானைகளில் ஒன்றிற்கு தண்ணீர் புகட்டுவதற்காக பாகனின் உதவியாளர் யானையை இறக்குவானை ஆற்றை நோக்கி அழைத்துச் சென்றுள்ளார்.

இதன் போது, திடீரென ஆவேசமடைந்த யானை உதவியாளரைத் தாக்கி, மிதித்துக் கொன்றுள்ளது.

உதவியாளரின் அலறல் சத்தத்தைக் கேட்டு அவரை மீட்க அந்த இடத்திற்கு விரைந்த யானைப் பாகனையும் யானை கொடூரமாகத் தாக்கியுள்ளது. இதனால் அவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர், யானை விகாரைக்கு அருகிலுள்ள வயல்வெளி ஒன்றிற்குள் சென்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வருகை தந்துள்ளனர். யானைக்கு மயக்க மருந்து செலுத்தி அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## யாழில்...

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில், வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தை பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்பதை நேற்றுக் காண முடிந்தது.

இம்மாதம் 30 ஆம் திகதிக்கு பின்னர் இந்த அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு அபராதத் தொகை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

அபராதத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்த பெருமளவிலான மக்கள் அதிகாலை முதலே நீண்ட வரிசைகளில் காத்திருந்து இந்த இலக்கத்தைப் பெற்று வருகின்றனர். (ம-7)

# கொழும்பில் கன மழை
## போக்குவரத்து ஸ்தம்பிதம்

(கொழும்பு)

நேற்று (22) திங்கட்கிழமை காலை முதல் பெய்த பலத்த மழை காரணமாக கொழும்பு நகரைச் சூழவுள்ள பல பிரதான வீதிகளிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

நிலவும் பலத்த மழை காரணமாக கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியின் பேலியகொடை வெளியேறும் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் அந்தப் பகுதியில் போக்குவரத்து நிலைமையை வழமைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

# அமைச்சர் விஜேபாலவுக்கு எதிரான மனுவை விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவர் என தீர்ப்பளிக்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நிர்வாகச் செயலாளர் ரேணுக பெரேராவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை பரிசீலித்த பின்னரே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5900)

076 825 7716 (ஆகாஸ்)



விற்பனையாளர் தேவை


யாழ். நகரிற்கு அருகில் Indoor plants and Pots விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனையாளர் தேவை.

(18 - 30 வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகள் மட்டும்)

074 208 2010

(7906)


# மரண அறிவித்தல்



மலர்வு 02.10.1946 உதிர்வு 21.06.2026

## நாகலிங்கம் அப்புலிங்கம்
## (ஸ்தாபகர் லிங்கம் கிறீம் ஹவுஸ்)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அப்புலிங்கம் அவர்கள் கடந்த 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் இராசையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாம்பிகை அப்புலிங்கம் அவர்களின் பாசமிகு கணவரும் கீதா (இலங்கை), கீதராஜ் (லண்டன்), கீதாகரன் (கனடா), கீதரமணன் (அமெரிக்கா), கீதசகிலன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தகுமார், கலா, அகல்யா, வித்யா, ரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பராசக்தி, பாலசிங்கம், கௌரீஸ்வரி மற்றும் திலகவதி, இரத்தினபூபதி, கமலாதேவி, மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், மனோன்மணி, தெய்வேந்திரம், மகாலிங்கம் மற்றும் கந்தசாமி, இரத்தினசிங்கம், பரமாநந்தன், சண்முகநாதன், தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் நாகேஸ்வரி, ராகினி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் சகலனும் கபிலயன், வேணுகன், பாணுகன், ஹரிஸ், பிரவீனா, பிருத்திகா, சயாணுகா, மகதீஸ், பவனேஸ், கவினாஸ், சிவாங்கி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் (75/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்) 21.06.2026 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 24.06.2026 புதன்கிழமை காலை 10 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து இறுதிக் கிரியைகள் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(7900)


இல. 75/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

வசந்தகுமார் (மருமகன்) : +94 76 097 8003
கீதசகிலன் (மகன்) : +94 77 711 1410

தகவல்: லிங்கம் கிறீம் ஹவுஸ் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 24 மணி நேரத்தில்
# 1,069 டெங்கு தொற்றாளர்கள்!



## சுகாதார கட்டமைப்பு சீர்குலையும் அபாயம்

**(கொழும்பு) ..............................**
**கடந்த 24 மணி நேரத்தில் இலங்கையில் 1,069 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்தார்.**

இந்தத் தொற்றுக்களுடன் இந்த வருடத்தினால் டெங்கு தொற்றினால் பதிவான மொத்த நோயாளர்களது எண்ணிக்கை 47,179 ஆக உயர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தின நிலவரப்படி இந்த ஆண்டில் டெங்கு நோய் தொடர்பாக 28 இறப்புகள் பதிவாகியுள்ளதாகவும் வைத்தியர் கபில கன்னங்கர சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

தொற்றுநோய் பரவல் இல்லாத காலங்களில் தினசரி நோயாளிகளின் எண்ணிக்கை சராசரியாக 150 முதல் 200 வரை இருக்கும் நிலையில், தற்போதைய பரவல் நிலை காரணமாக அந்த எண்ணிக்கை 600 முதல் 650 வரை உயர்ந்துள்ளதாகவும், அந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

வைத்தியசாலைகளில் கொள்ளளவு ஏற்கனவே முழுமையாக நிரம்பிவிட்டதாகவும், நோய்த்தொற்றின் பரவல் இதே வேகத்தில் தொடர்ந்தால் ஒட்டுமொத்த சுகாதாரக் கட்டமைப்பும் சீர்குலையும் அபாயம் உள்ளது.

நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதில் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதாரப் பணியாளர்கள் கடும் மன மற்றும் உடல் ரீதியான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இத்தகைய அழுத்தமான சூழல் காரணமாக வரும் வாரங்களில் டெங்கு தொடர்பான உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும்.

எனவே, தங்கள் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதன் மூலம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (நி)

# சுற்றுலா வருவாயில் சரிவு

(கொழும்பு)

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் ஜனவரி முதல் மே மாதம் வரையான காலப்பகுதியில் நாட்டில் சுற்றுலாத்துறை வருவாய் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையின்படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் வரை ஈட்டப்பட்ட சுற்றுலா வருவாய் 1,360 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இருப்பினும், 2025 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில், சுற்றுலாத்துறை வருவாய் 1,543.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

முந்தைய ஆண்டின் புள்ளிவிவரத்துடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டின் முதல் ஐந்து மாதங்களுக்கான சுற்றுலாத்துறை வருவாயில் 11.9 சதவீத சரிவு ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், இந்த ஆண்டு மே மாதத்தில் சுற்றுலா வருவாய் 155.7 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.

இது 2025 மே மாதத்தில் பதிவான 164.1 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடத்தக்கது. (நி)

# அடுத்த மாதம் முதல் பேருந்து கட்டணத்தில் மாற்றம்

(கொழும்பு)

எரிபொருள் விலை மாதாந்த திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டு பேருந்து கட்டண திருத்தம் தொடர்பில் ஆராயப்படுவதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வருடாந்த பேருந்து கட்டண திருத்தம், இந்த ஆண்டு ஜூலை 3 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படலாம் என சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போதே தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனை தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், கட்டண திருத்தம் தொடர் பில் ஏனைய பேருந்து சங்கங் களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் எரிபொருள் விலை திருத்தங்களில் டீசல் விலை குறைக்கப்பட்டாலும், அடுத்த 6 மாதங்களுக்கு பேருந்து கட்டணங்களை குறைக்கப் போவதில்லை என்றும் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

டீசல் விலை அதிகரிப்பு காரணமாக, தனியார் பேருந்து சங்கம் தற்போது கடுமையான நிதி நெருக்கடியை எதிர் கொண்டு வருவதாகவும் இதனால், ஜூன் மாத ஆரம்பம் முதல் இதுவரை சுமார் 60 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், பேருந்து கட்டண திருத்தம் தொடர்பான இறுதித்தீர்மானம், சம்பந்தப்பட்ட தரப்புகளுடனான கலந்துரையாடல்களின் பின்னர் அறிவிக்கப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (நி)

# அமெரிக்க உயர் அதிகாரிகள் இலங்கை விஜயம்



(கொழும்பு)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் போல் கபூர் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இரவு நாட்டை வந்தடைந் துள்ளார்.

அவர் நாளை வரை இலங்கையில் தங்கியிருந்து பல முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாட வுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

குறித்த சந்திப்பின்போது சிரேஷ்ட அரச மற்றும் வர்த்தக தலைவர்களுடனான அவரது சந்திப்புகள், வர்த்தகம் மற்றும் முதலீட்டை வளர்ப்பதிலும், கடல்சார் ஒத்துழைப்பை பலப்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது. (நி)

# தாதியர் பற்றாக்குறையால் தவிக்கும் வைத்தியசாலைகள்

## ஐக்கிய தாதியர் சேவை சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)



நாடு பூராகவும் உள்ள வைத்தியசாலைகளில் சுமார் 23,000 தாதியர் பற்றாக்குறை நிலவுவதால், தாதியர் ஊழியர்கள் கடும் மன அழுத்தத்திற்கும் பணிச் சுமைக்கும் உள்ளாகியிருப்பதாக ஐக்கிய தாதியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தாதியர் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு தற்போதைய அரசாங்கமும் முறையான மற்றும் சாதகமான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கத் தவறியுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் தென்னே ஞானானந்த தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். (நி)

# ஜே.வி.பி பொதுச் செயலாளர் சீனத் தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹொங், ஜே.வி.பி பொதுச் செயலாளர் டில்வின் சில்வா இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான சீன பிரதித் தூதுவர் யான்வெய் சு மற்றும் சீனத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் மெய் ஜிங் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, எதிர்வரும் ஜூலை 1ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 105 ஆவது ஆண்டு நிறைவு விழா குறித்து சீனத் தூதுவர், ஜே.வி.பி பொதுச் செயலாளருக்கு விளக்கமளித்ததுடன், ஆண்டு விழாவை முன்னிட்டு கொழும்பில் நடத்தப்படவுள்ள உத்தியோகபூர்வ விழாவில் கலந்துகொள்ளுமாறு டில்வின் சில்வாவுக்கு அழைப்பு விடுத்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





# வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள்; சிறந்த வீரர்களுக்கான விருதுகள் வழங்கி வைப்பு

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான பெருவிளையாட்டுக்களில் சிறந்த விளையாட்டு வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.


அதன்படி ஆண்களுக்கான போட்டிக்களில் எல்லே போட்டியில் ஆண்கள் பிரிவில் வரணி மத்திய கல்லூரியைச் சேர்ந்த தர்மிலன், வொலிபோல் போட்டியில் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியைச் சேர்ந்த மதுவிஷன், கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டியில் சிதம்பரக் கல்லூரியைச் சேர்ந்த அபிஷாந், கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மசீலன், மேசைப்பந்தாட்டத்தில் யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த லோகித், சதுரங்கத்தில் யாழ் இந்துக் கல்லூரியையைச் சேர்ந்த ஜங்கன், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் எறிபந்தாட்டத்தில் மன்னார் அடம்பன் மகா வித்தியாலயத்தையைச் சேர்ந்த மதுஷன், கரம் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியையைச் சேர்ந்த தீபிகன், பூப்பந்தாட்டத்தில் மன்னார் பற்றிமா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நிகாஷன் தற்குரூஸ், கபடியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த துவாரகன், மென்பந்து கிரிக்கெட்டில் சென் ஜோன்ஸ் கல்லூரியையைச் சேர்ந்த ஜோன் நதேனில், கராத்தே போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரியையைச் சேர்ந்த தமிழ்நிலவன், கைப்பந்தாட் டத்தில் பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த துஷாந், அரை மரதன் போட்டியில் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தையைச் சேர்ந்த ஏ.எம். அதீக் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் கடினப்பந்து கிரிக்கெட்டில் யாழ் இந்துக் கல்லூரியையைச் சேர்ந்த பிரேமிகன், யூடோ போட்டி யில் கொக்குவில் இந்துக் கல்லூரியையைச் சேர்ந்த ஜங்கரன், குத்துச் சண்டைப்போட்டியில் பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த அபிஷன், தைக்கொண்டோ போட்டியில் பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தையைச் சேர்ந்த டினோசன் சில்வா, மல்யுத்தப் போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியையைச் சேர்ந்த எழிலன், நீச்சல் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆனந்த சாரங்கன், காற்பந்தாட் டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சஞ்சய், ரெனிஸ் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரியையைச் சேர்ந்தரினோசன், பளு தூக்கும் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி யையைச் சேர்ந்த செய்த தர்சனன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (3-90)




## வெறும் 11 பந்துகளில் அரைச்சதம்

# உலக சாதனை படைத்த வைபவ் சூர்யவன்ஷி



முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் அதிவேகமாக ஒருநாள் அரைச் சதத்தை பதிவு செய்து, இந்திய 'ஏ' அணியின் இளம் நட்சத்திர வீரர் வைபவ் சூர்யவன்சி புதிய உலக சாத னை படைத்து சர்வதேச கிரிக்கெட் உல கையே வியப்பில் ஆழ்த்தி யு ள்ளார்.

இலங்கை அணியின் பந்துவீச்ச ாளர்களைக் திணறடித்த அவர், எதிர்கொண்ட வெறும்11 பந்துகளில் தனது அரைச்சதத்தைக் கடந்து புதிய உலக சாதனையைப் பதிவு செய்தார்.

அவரது இந்த அசுரத்தனமான அதிரடி ஆட்டத்தில் 5 பிரம்மாண்ட ஆறு ஓட்டங்களும் , 5 நேர்த்தியான நான்கு ஓட்டங்களும் அடங்கும்.

இந்திய இளம் வீரர் வைபவ் சூர்யவன்சி வெளிப் படுத்திய இந்த உலக சாதனை ஆட்டம், மைதானத்தில் இருந்த ரசிகர்களைப் பெரும் உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளதுடன் சர்வதேச விளை யாட்டு ஊடகங்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. (3)




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 5 நாட்கள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 120 | 200 | 180 | 200 | 200 | 100 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | -- | 220 | 190 | 330 |
| பச்சைமிளகாய் | 550 | 500 | 500 | 550 | 700 | 600 | 600 |
| தக்காளி | 850 | 800 | 800 | 700 | 800 | 800 | 680 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 250 | 150 | 200 | 200 | 160 |
| கோவா | 250 | 250 | 350 | 250 | 200 | 250 | 180 |
| கரட் | 400 | 450 | 500 | 450 | 400 | 400 | 350 |
| பூசணி | 120 | 140 | 150 | 100 | 150 | 120 | 120 |
| புடோல் | 200 | 200 | 200 | 200 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 250 | 140 | 100 | 140 | 160 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 300 | 500 | 450 | 160 | 340 |
| பெரிய வெங்காயம் | 220 | 240 | 200 | -- | 200 | -- | 180 |
| பாகற்காய் | 1400 | 2400 | 1500 | 2000 | 2000 | 1200 | 500 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 250 | 400 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 330 | 320 | 300 | 400 | 400 | -- | -- |
| பயற்றங்காய் | 700 | 500 | 600 | 700 | 450 | 500 | 400 |
| லீக்ஸ் | 400 | 450 | 400 | 400 | 400 | 400 | 350 |
| பீற்றூட் | 450 | 400 | 400 | 450 | 500 | 600 | 480 |
| கறிமிளகாய் | 550 | 500 | 600 | 500 | 450 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 2000 | 1700 | 2000 | 1500 | 1500 | 1500 | 1500 |
| போஞ்சி | 650 | 600 | 600 | 600 | 600 | 550 | 450 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 200 | -- | 160 | -- | -- |
| கீரை – 1 பிடி | 50 | 60 | 50 | 80 | 100 | -- | 70 |
| தேசிக்காய் | 600 | 50 | 400 | 460 | 500 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 110 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 450 | 350 | 350 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 500 | 420 | 480 | -- | -- |
| முள்ளங்கி | 250 | 160 | 200 | 180 | 300 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | -- | 60 | -- | 40 |
| வல்லாரை | 80 | 70 | 80 | -- | 100 | -- | 70 |
| ஈரப்பலா | 250 | -- | 120 | -- | 250 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வவுனியாவில் 5 பேருக்கு டெங்கு நோய் தொற்று

(வவுனியா)

வவுனியாவில் 5 பேருக்கு டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாடு பூராகவும் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வவுனியாவில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆயினும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது வவுனியா மாவட்டத்தில் டெங்கு தொற்று குறைவாகவே காணப்படுகின்றது.

அந்த வகையில் வவுனியாவில் 5 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் முகமாக டெங்கு பெருகும் இடங்களை அழிக்குமாறும், சுற்று சூழலை சுகாதாரமாகவும், சுத்தமாகவும் வைத்திருக்குமாறும் சுகாதார பிரிவினர் பொது மக்களிடம் கோரியுள்ளனர். (3)

# எரிபொருள் விலை குறைப்பை எதிர்பார்க்க முடியாது

## பெற்றோலிய கூட்டுத்தானம்

(கொழும்பு)

எதிர் வரும் ஜூலை மாதம் எரிபொருள் விலை குறைப்பை எதிர்பார்க்க முடியாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை ஸ்திரத்தன்மையில் இல்லை என்பதை சுட்டிக்காட்டி, இந்த அறிவிப்பினை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது. (நி)

# செயற்கைக்கால்களை இலவசமாக வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தது யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையம்

(யாழ்ப்பாணம்)

கடந்த நாற்பது ஆண்டுகளாக செயற்கைக் கால்களைப் பொருத்தி உதவியதன் மூலமும் ஏனைய பல சேவைகள் மூலமாகவும் மாற்றுத் திறனாளிகளுக்கான சேவையில் உறுதியாக இணைந்திருந்த யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையமானது இவ்வாண்டு மற்றுமொரு செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளது.

இதுவரை செயற்படுத்தி வந்த வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக இந்தியாவின் ஜெய்ப்பூர் பாணியிலான செயற்கைக்கால்களை யாழ்ப்பாணத்திலேயே தயாரித்து பயனாளிகளுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கும் செயற்றிட்டம இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தினைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடனும், அனுசரணையுடனும் இச் செயற்றிட்டமானது முன்நகர்த்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

செம்மையாகப் புனரமைக்கப்பட்ட கட்டிடத்தில் இந்தியாவின் பகவான் மஹாவீர் விகாளங் ஸஹாயத் சமித்தி அமைப்பின் உதவியுடன் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தினால் இறக்குமதி செய்து தரப்பட்ட நவீன இயந்திரங்கள் மற்றும் மூலப்பொருட்களினைப் பயன்படுத்தி இந்தியாவின் ஜெய்ப்பூர் முறையிலான செயற்கைக்கால்கள் தயாரிக்கப்படுகின்றன.

புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டிடத்தின் மீள்திறப்பு விழாவும் , புதிய செயற்கைக் கால் அங்குரார்ப்பண விழாவும் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இலக்கம்.19, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் தலைவர் திருமதி கோசலை மதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீமான் சாய்முரளி , யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# சமய அறிவுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தலங்காவற் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சமய அறிவுப் போட்டி இம்மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 2 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. எழுத்து மூலம் நடைபெறவுள்ள இப் பரீட்சையில் தரம் 3 தொடங்கி 11 வரை பயிலும் மாணவர்கள்கலந்து கொள்ளலாம். இப் பரீட்சையில் தோற்ற விரும்பும் மாணவர் கள் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்பாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஆலய மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியினுள் சேர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை ஆலயத் தின் அருகாமையில் உள்ள கடைகளி லிருந்தோ. அல்லது 074 147 1759 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ பெற்றுக்கொள்ளலாம். (3)



கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வானது நேற்றைய தினம் காலை 8 மணிக்கு கல்லூரி முதல்வரும் பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான அருட் சகோதரி மரிய வசந்தி தலைமையில் இடம்பெற்றது.




## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

**முக்கிய அறிவித்தல்.**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரில் நாட்டின் பல பகுதிகளில் நிதி வசூலிக்கப்படுவதாக எமக்கு அடியார்களினூடாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினர் ஒரு தனிப்பட்டவருக்கோ அல்லது எந்தவொரு நிறுவன அமைப்புக்கோ நிதி வசூலிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகிறோம். தங்களிடம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரில் யாராவது நிதி வசூலிக்க வந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக அறிவிக்கவும். ஆலயத்திற்கு பணத்தை செலுத்த விரும்பும் அடியார்கள் **பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம், நயினாதீவு** என்ற முகவரிக்கு காசுக்கட்டளை மூலம் பணத்தை அனுப்பலாம் அல்லது கீழ்வரும் வங்கி கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்பு செய்து வைப்பு சான்றிதழை ஆலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன்.

* A/C NO - 012426285-01
  Commercial Bank of Ceylon Ltd. Peoples Park, Pettah, Colombo 11
* A/C NO -1060012330
  Commercial Bank of Ceylon Ltd., Velanai Code - 05
* A/C NO - 007687860
  Bank of Ceylon, Velanai Code - 63
* DAILY ANNATHANAM
  A/C NO - 86645863
  Bank of Ceylon, Velanai - 03
  Code - 63

T.P.NO: 021 432 3440 / 021 432 3447

**அன்னையின் சேவையில்**
**கனகசபை ஜீவசீலன்,**
**கௌரவ செயலாளர்,**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,**
**நயினாதீவு.**

(C-5898)



## ஏழாலை களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

### இலட்சார்ச்சனை

24.06.2026 நாளை புதன்கிழமை காலை 6.00-11.30 மணிவரை இலட்சார்ச்சனை நடைபெற்று தொடர்ந்து விசேட பூஜைகள் இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும். தொடர்ந்து அன்றைய தினம் மாலை 3.00-6.30 மணிவரை இலட்சார்ச்சனை நடைபெற்று அடியவர்களுக்கு இராப்போஷனம் வழங்கப்படும்.

### சங்காபிஷேகம்

எதிர்வரும் 25.06.2026 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு 108 சங்குகளால் அம்பிக்கைக்கு சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து விசேட பூஜைகள் நடைபெற்று சுவாமி வீதி உலாவந்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

தேவஸ்தானம்

(7952)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்குக்கான புகையிரத சேவையை மீள அதிகரிப்பதற்கு நடைவடிக்கை

## புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் அறிவிப்பு




(யாழ்ப்பாணம்)

வடக்குக்கான புகையிரத சேவையை மீள அதிகரிப்பதற்கு, இயந்திர பற்றாக்குறையே பிரதான காரணம் எனவும், புதிய இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் ரவீந்திர பத்மபிரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான புகையிரத சேவைகளை மீள அதிகரித்தல், நேர அட்டவணைகளை மீளமைத்தல் மற்றும் உட்கட்டமைப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்துக்கு பெருமளவான சுற்றுலாவிகள் வருகை தருவதாலும், பாதுகாப்பான மற்றும் நேரத்தை மீதப்படுத்தும் பயணமாக ரயில் போக்குவரத்து அமைவதாலும், கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான ரயில் சேவைகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை ஆளுநர் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

அத்துடன், பயணிகளின் வசதிக்கேற்ப தற்போதைய நேர அட்டவணைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த புகையிரத திணைக்கள பொது முகாமையாளர்,


ரயில் இயந்திரங்களுக்கான பற்றாக்குறையே சேவைகளை முழுமையாக மீள ஆரம்பிப்பதில் பிரதான தடையாக உள்ளது. புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகமாகச் சேவைகளை அதிகரிப்பது மற்றும் பகல் நேர ரயில் சேவைகளை ஒழுங்கமைப்பது தொடர்பில் ஆராய்ந்து துரித நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

அத்துடன், 'யாழ். ராணி' ரயில் சேவையில் அவசியமான மாற்றங்களை மேற்கொண்டு, அதனை வவுனியா வரை நீடிப்பது குறித்தும் இக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

அதேவேளை அநுராதபுரம் வரை மாத்திரமே முன்னெடுக்கப்படும் சரக்கு ரயில் சேவையை, வடக்கு மாகாணத்தின் காங்கேசன்துறை வரை விரிவுபடுத்துமாறு ஆளுநர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ரயில்வே பொது முகாமையாளர், அதற்கான துரித நடவடிக்கைகளை எடுபபதாக உறுதியளித்தார். (3)

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் இந்திய பாடகர் சத்தியன் அஞ்சலி



(வவுனியா)

முள்ளிவாய்க்காலில் யுத்தத்தினால் உயிரிழந்த தமிழ் மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள பொதுத் தூபிக்கு இந்திய பின்னணிப் பாடகர் சத்தியன் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்த அவர், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள மக்களையும் இடங்களையும் பார்வையிட்டார்.

அதன் ஒரு பகுதியாக முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திற்குச் சென்ற சத்தியன், யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள பொதுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தி தனது அஞ்சலியைத் தெரிவித்தார். (3-299)

# வடக்கில் அபிவிருத்தி பணிகளுக்கான வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 'டித்வா' புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்கில், ஒப்பந்த அடிப்படையிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான நேரடி நேர்முகத் தேர்வு எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

வடமாகாண பிரதம செயலாளர் செயலகத்தில் வியாழக்கிழமை (25) காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆர்வம் மற்றும் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் நேரடி நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள முடியும் எனவும் கல்வித் தகைமைகள் மற்றும் இதர மேலதிக விபரங்களை வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.np.gov.lk ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் பொறியியலாளர் - 10 வெற்றிடங்கள், வரைவாளர் - 5 வெற்றிடங்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் - 20 வெற்றிடங்கள், வேலை மேற்பார்வையாளர் - 17 வெற்றிடங்கள் ஆகிய பதவிகளுக்காகத் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் கோரப்பட்டுள்ளனர். (3)



கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் புதிதாக 24 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலை மக்கள் பயன்பாட்டுக்காக நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் திறந்து வைக்கப்பட்டது.

# சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்- 2025

### யா/மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை

**9ஏ**

ஆர். ரஜீனா, ஆர்.ரமீனா, என்.ரஷனா, ஆர்.ரதுமினா, எ.சஹீரா, வி.ஸ்ரீஆராதனா, வி.தர்விகா, வி.திவ்வியலோயினி, கே. அனோயா, இ.கனீஸ்ரனா, யே.அஸ்விதா, எஸ்.பஹவானி, எஸ். சாகித்தியா, யி.வர்சா, எஸ்.திவேரா, ஆர்.ஜெனனி, ஆர்.சுவஸ்திகா, எ.மரிசாளினி, பி.யதுஷா, வை.அஸ்வினி எஸ்.ஹம்சிகா, எம்.அன்பினி, என்.காவ்யா, எஸ்.நிதுறா, ஜே. சருசனா, பி.சுமித்ஷனா, ஆர்.வர்ணிகா.

**8ஏபி**

பி.திவ்யபிரபா, ஆர்.அஸ்வியா, எஸ்.அக்சயா, பி.கிருஷங்கீ, ரி.துவிதா, எம்.தர்மிகா, எ.டினுஜா, கே.ராகவீஹா, வை.அம்சவி, எஸ்.காவியா, பி.கிருஷாகினி, யு.அபிஸா, எம்.சயானிகா, பி.அனாங்கவி, ஜே.அக்சயா.

**8ஏசி**

யு.அக்ஸனா, எம்.கிஷாமிகா, எ.அக்ஷனா, கே.டினுஷி

### யா/மகாஜனக் கல்லூரி

**9ஏ**

எஸ்.தர்சாளினி, எம்.தஸ்மியா, ஐ.கபீஷனன், வி.பிரவீஷ், பி.சாய்பிரியன், பி.கபிலன், எஸ்.சிவானுஜா

**8ஏ**

ஜெ.சானுஜா, எம்.மாதுமை, எஸ்.கேதாரன், பி.கோவிழி வி.ஆர்சன், வி.அக்சயா, கே.சின்மயன்

### மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

**9ஏ**

லி.அபிசன், ம.தக்சிகா, எஸ்.வர்ஜினி, ஆர்.இந்துமதி, எஸ்.டன்சிகா, ந.திரிசானி, சி.காவியா, த.அபிசா, சு.குவேனி, எஸ்.ஜெகன், சதுர்சிகா

### மு/வித்தியானந்தாக் கல்லூரி

**9ஏ**

வி.அபினுஷ், என்.கம்சிகா, எஸ்.மிதுசா, என்.துபிராகவ், கே.கபிசனா, யி.சங்கவி, எஸ்.கஜானா

**8ஏபி**

பி.நிலுக்சன், எஸ். லினுசியா, எ.திலக்சிகா, கே.பிரவின்ஜன், எம்.ஸஹானி

### மு/கலைமகள் வித்தியாலயம்

**9ஏ**

யிலுக்சன், டக்சகி

**8ஏ**

குவின்ராஜா, திவ்யா

### கிளி/விவேகானந்த வித்தியாலயம்

**9ஏ**

எஸ்.விதுசன், பி.துவாரதன்

**8ஏபி**

என்.ஹனோதயன், இ.பென்சிலியோரா

### யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி

**9ஏ**

எஸ்.கிறிஸ்திகா, எஸ்.வர்ணிஹா, ரி.ஷகானி, ரி.அக்ஷீகா, எஸ்.நிலுக்ஷி, ஜெ.ஷரண்யா, கே.சஞ்யித்தா, கே.கஜானி, வி.டிலக்ஷனா, எஸ்.றிஷானா, பி.ஜஸ்மினி, எஸ்.கேசுகி, எஸ்.சாருயா, ரி.தாமிரா.

**8ஏ**

பி.டினுஜா, ரி.தரணிகா, எஸ்.ஓஷின், எஸ்.பவிஷா, ஜெ.சாருகா, எஸ்.கிஷனா, எம்.சங்கவி, கே.டிலோஜா, பி.பகிரதி, எ.ருஷாளினி, எஸ்.அகஸ்றீனா, எம்.மாதங்கி, கே.நர்ஷனா, எஸ். திவியா, ரி.தரணியா.

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**9ஏ,** ஜெ.ஜனுஷன்,

**8ஏபி,** எஸ்.பிஜந்த், பி.தன்சயன், **8ஏசி** கே.சதுர்தியன்,

### மானிப்பாய் இந்துக்கல்லூரி

**9ஏ,** ஆர்.விதுஷாந், எம்.கார்த்திகன், டி.கவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
## க.பொ.த (உ/த) 2028 மாணவர் அனுமதி

க.பொ.த (உ/த) -2028 பிரிவுக்குரிய புதிய மாணவர்களின் அனுமதிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 03.07.2026 ஆம் திகதிக்கு முன்னர் அல்லது அன்றைய தினத்திற்குள் பதிவுத் தபால் மூலம் பாடசாலைக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன்.

(C-5896)

**அதிபர்,**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,**
**யாழ்ப்பாணம்.**



## யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
## தரம் 12 அனுமதி - 2028

யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் தரம் 12 (2028) இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது. க.பொ.த சாதாரணதரப் பரீட்சை 2025(2026) சித்தி பெற்றவர்கள் மட்டும் பாடசாலை நேரத்தில் (காலை 8.00-01.00 மணி) விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் **பதிவுத் தபாலில் மட்டுமே** அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி - **23.06.2026**
விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி - **03.07.2026**
விண்ணப்படிவம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி -
**அதிபர், யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

காலதாமதமாகி கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு:- **கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர் முகத்தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.**

**அதிபர்** (C-5897)



## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில். (C-5895)

**074 196 4945, 076 682 7368**
**இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# டெங்கு பரிசோதனையை சாதகமாக்கும் மோசடிக்காரர்கள்

## அவதானத்துடன் செயற்படுமாறு மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

பொது சுகாதார ஆய்வாளர்கள் போல் ஆள் மாறாட்டம் செய்து, வீடுகள் மற்றும் நிறு வனங்களிட மிருந்து மோசடியாக பணம் பெறும் நபர்கள் குறித்து ,லங்கை பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் எச்ச ரித்துள்ளது.

இந்த மோசடிக்காரர்கள், டெங்கு பரிசோதனை நடவடிக்கைகளை தங்க ளுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, சட்ட நடைமுறைகள் தொடர் பானது என்று கூறி பணம் கோருகின் றமை கண்டறியப்பட்டுள்ள தாக இலங்கை பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்க தலைவர் உபுல் ரோஹன கூறி யுள்ளார்.

இவ்வாறான சம்பவ ங்கள் குறித்து அறிக்கைகள் வெளிவந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

எனவே பொது சுகாதார ஆய்வாளர் கள் என ஆள் மாறாட்டம் செய்பவர்களு க்கு பணம் கொடுப்பதைத் தவிர்க்குமாறு




பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள் ளது.ஏனெனில் அவர்கள் எந்தவொரு உத்தியோக பூர்வப் பணிகளுக்காகவும் எந்த சூழ்நிலையிலும் பணம் வசூலிப் பதோ அல்லது ஏற்றுக்கொள்வதோ இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பொது சுகாதார ஆய்வாளர் எனக் கூறிக் கொள்ளும் எவரேனும் தமது கடமைகள் தொடர்பாகப் பணம் கோரினால், பொதுமக்கள் பொலிஸா ருக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்கோ தகவல் தெரிவிக்க நடவடி க்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# பதவி விலகினார் பிரித்தானிய பிரதமர்



(லண்டன்)

பிரித்தானிய பிரதமர் சர் கெய்ர் ஸ்டார்மர், பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதன்படி அப் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் ஆண்டி பர்ன்ஹாம் நிரப்புவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நான் எடுத்த ஒவ்வொரு முடிவும் நான் நேசிக்கும் நாட்டுக்கு முன்னுரிமை அளிப்பதாகவே இருந்துள்ளது, அதனால் தான் தொழிலாளர் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகுகின்றேன்" என்று தனது உரையில் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை தான் பிரதமராக நீடிப்பேன் என்று அவர் தெரிவித்தார.

உள்ளாட்சி இடைத் தேர்தல்களில் அவரது தொழிலாளர் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, மக்கள் செல்வாக்கிழந்து வரும் ஸ்டார்மர் பதவி விலக வேண்டுமென்ற அழுத்தத்தை எதிர்கொண்டார். (நி)



# அமெரிக்கா- ஈரா
# உயர்மட்டப் பேச்சுவா




(ஜெனீவ
சுவிட்சர்
மற்றும் ஈ
அதிகாரிக
பேச்சுவார்
நேற்று
மத்தியஸ்த

ஹார்முஸ் நீரிணையை மீண்டும் மூடியதாக ஈரான் அறிவித்தது மற்றும் ஈரான் மீதான தாக்குதல்களை மீண்டும் தொடங்குவதற்கான அச்சுறுத்தல்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தியது போன்ற நிகழ்வுகளால், இப் பேச்சுவார்த்தையின் தொடக்கம் பதற்றமான சூழலில் அமைந்திருந்தது.

மத்தியஸ்தம் வகித்த நாடுகளான கட்டார் மற்றும் பாகிஸ்தான் வெளியிட்ட கூட்டறிக்கையில், 60 நாட்களுக்குள் ஒரு இறுதி ஒப்பந்தத்தை எட்டுவதற்கான செயற்றிட்டம் குறித்து அமெரிக்காவும் ஈரானும் ஒப்புக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டார் நாட்டுக்குச் சொந்தமான சுவிட்சர்லாந்தின் மலைப்பகுதி ஓய்விடமான 'பர்கென்ஸ்டாக்' பகுதியில், இவ்வாரத்தின் எஞ்சிய நாட்களிலும் தொழில்நுட்ப ரீதியிலான பேச்சுவார்த்தைகள் அமைச்சு வெளியிட்ட அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. லெபனானில் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வழிமுறை ஒன்றை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டதாகவும், சர்ச்சைக் குரிய நீரிணை வழியாக வணிகக் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதை உறுதிசெய்ய உதவும் வகையில் தகவல் தொடர்பு வழிமுறை ஒன்றை ஏற்படுத்தியதாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது.ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட நிலையற்ற போர்நிறுத்தத்தை மேலும் குறைந்தது 60 நாட்களுக்கு நீட்டிப்பதற்காக, கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், அமெரிக்கத் துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் நேற்று முன்தினம் ஈரானிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் திங்கட்கிழமை அதிகாலை வரை நீடித்தன.

சமூக ஊடகப் பதிவு ஒன்றில் கருத்துத் தெரிவித்த ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, எண்ணெய் மற்றும் பெட்ரோ இரசாயனப் பொருட்கள் ஏற்றுமதிக்கான விலக்குகள், முடக்கப்பட்டிருந்த சில சொத்துக்களின் விடுவிப்பு மற்றும் ஈரானுக்கான மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்குதல் ஆகியவற்றைத் தங்கள் நாடு உறுதி செய்துள்ள

# லெபனான் ஆயுதக் குழுக்களை ஈரான் கட்டுப்படுத்த வேண்டும்
## ட்ரம்ப் கடும் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

லெபனானில் பிரச்சனைகளை ஏற்படுத்த நிதியளித்து செயல்படும் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக வலியுறுத்தியுள்ளார்.

தனது 'ட்ரூத் சோஷியல்' சமூக ஊடகக் கணக்கில் ஒரு சிறப்புப் பதிவில், டெஹ்ரான் ஆட்சி உடனடியாகச் செயற்பட்டு இந்தக் குழுக்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், ஈரானுக்கு எதிராகக் கடுமையான இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். மேலும் அவர், "அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், கடந்த வாரம் ஈரான் மீது நாங்கள் தொடுத்த தாக்குதலை விட மிகவும் சக்திவாய்ந்த தாக்குதல் மூலம் அவர்களை மீண்டும் தாக்குவோம்," என்று தெரிவித்தார். (நி)

(வோஷிங்டன்)

ஹார்முஸ் நீரிணை ஊடான கப்பல் போக்குவரத்து மந்த நிலையில் இருப்பதாலும், தற்காலிக அமைதி ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்க மற்றும் ஈரானிய அதிகாரிகளுக்கு இடையே நடைபெற்ற முதல் சந்திப்பு சற்று சுமுகமற்ற முறையில் தொடங்கியதாலும், நேற்றுதிங்கட்கிழமை மசகு எண்ணெய் விலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 54 சென்ட்கள் அல்லது 0.67% அதிகரித்து $81.11ஆக விற்பனை செய்யப்படுகிறது. முன்னதாக, இதன் விலை அதிகபட்சமாக $82.30 வரை காணப்பட்டது.

WTI மசகு எண்ணெய் விலையானது ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னதாக, $2.02 அல்லது 2.64% ஆக அதிகரித்து, ஒரு பீப்பாய் WTI மசகு எண்ணெய் $78.62ஆக இருந்தது. இதன் ஆகஸ்ட் மாதத்துக்கான அடுத்த ஒப்பந்த விலை $1.43ஆக அதிகரித்து, பீப்பாய் ஒன்றுக்கு $77. 28ஆக இருந்தது. கடந்த வெள்ளிக் கிழமை (19) அமெரிக்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# ...ான் இடையிலான ...ார்த்தைகள் நிறைவு

...வா) --------

...ர்லாந்தில் அமெரிக்க ...ஈரானிய உயர்மட்ட ...களுக்கு இடையிலான ...ர்த்தையின் முதல் சுற்று நிறைவடைந்ததாக ...தர்கள் தெரிவித்தனர்.



தாகக் குறிப்பிட்டார்.

அதேநேரம், தற்போதைக்கு பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து விட்டனவா என்று கேட்கப்பட்ட போது, வெள்ளை மாளிகை உடனடியாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

ஞாயிற்றுக்கிழமை பேச்சுவார்த்தைகள் அதிகாரப்பூர்வமாகத் தொடங்குவதற்குச் சற்று முன்பு, ஈரான் அதிகாரிகள் மீண்டும் நீரிணையை மூட முயன்றால், "உங்களுக்கு ஒரு நாடே இருக்காது" என்று அவர்களிடம் கூறியதாக ஃபாக்ஸ் நியூஸ் செய்தி வெளியிட்டது.

மேலும், அமெரிக்கா அந்த நீர்வழியைக் கையகப்படுத்தும் என்றும், ஒருவேளை தனது சொந்த சுங்கக் கட்டணத்தையும் வசூலிக்கக்கூடும் என்றும் ட்ரம்ப் தனது முந்தைய அச் சுறுத்தலை மீண்டும் வலியு றுத்தி யதாக ஃபாக்ஸ் நியூஸ் கூறியது.

சுவிட்சர்லாந்தில் நடந்த விவாத ங்கள் குறித்து அமெரிக்க மற் றும் ஈரான் தரப்புகள் தனித் தனி விவரங்களை வழாங் கின.

ட்ரம்பின் அச்சுறுத்தல்கள் பகிரங்கமான பின்னர், பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற அறைக்கு ஈரான் தூதுக்குழு திரும்ப மறுத்து விட்டதாகவும், இருப்பினும் பாகிஸ்தான் மற்றும் கட்டார் மத்தியஸ்தர்கள் மூலம் செய்திகள் பரிமாறப்பட்டு வருவதாகவும், ஈரானின் அரை-அரசு தஸ்னிம் செய்தி நிறுவனம், ஒரு தகவலறிந்த வட்டாரத்தை மேற்கோள் காட்டித் தெரிவித்தது.

தஸ்னிமின் தகவல் மூலத்தின்படி, அணுசக்தி விவகாரங்கள் குறித்த பேச்சுவார்த்தைக ளைத் தொடங்குவதற்கு, முடக் கப்பட்ட சொத்துக்களை விடு விப்பது மற்றும் ஈரானிய எண் ணெய் ஏற்றுமதிக்கு அங்கீ காரம் அளிக்கும் அமெரிக்கா வின் விலக்குகள் உள்ளிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஏனைய பகுதிகளை வழங்குவது அவசியம் என்று ஈரானியர்கள் கூறியுள்ளனர்.

எவ்வாறெனினும், உலகளாவிய எரிசக்திப் போக்கு வரத்திற்கான ஒரு முக்கிய தடையாக விளங்கும் ஹார்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கும், லெபனான் உட் பட அனைத்துப் பகைமை களையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் இந்த ஒப்பந்தம் வழிவகுத்தது. (நி)

## செயற்கை நுண்ணறிவு உதவியுடன் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்ட இரட்டையர்கள்





(நைஜர்)

தலைப்பகுதியில் ஒன்றாக இணைந்த நிலையில் பிறந்த இரட்டைச் சகோதரிகள், 20க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட வைத்திய நிபுணர்கள் பங்கேற்ற, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட அதிநவீன அறுவை சிகிச்சைகள் மூலம் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.


நைஜீரியாவில் 2023 ஆம் ஆண்டு மண்டையோடுகள், மூளைத் திசுக்கள் மற்றும் இரத்த நாளங்கள் ஆகியவை ஒன்றாக இணைந்த நிலையில் பிறந்த மெர்சி மற்றும் குட்னஸ் ஆகிய இந்த இரட்டையர்களுக்கு, மொத்தம் சுமார் 40 மணி நேரம் நீடித்த நான்கு கட்டங்கள் கொண்ட சிக்கலான அறுவை சிகிச்சை செயல்முறை மேற்கொள்ளப்பட்டது.

மிகவும் சிக்கலான இந்த அறுவை சிகிச்சையை மிகத் துல்லியமாக மேற் கொள்வதற்காக, வைத்தியர்கள் செயற்கை நுண்ணறிவு, முப்பரிமாண வடிவமைப்பு, மெய்நிகர் உண்மை மற்றும் மேம்படுத்தப்பட்ட உண்மை ஆகிய நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி முன்கூட்டியே திட்டமிட்டு, பயிற்சி செய்தனர்.

இதன் இறுதிப் பிரிவு அறுவை சிகிச்சையானது, அபுதாபியில் உள்ள ஷேக் கலீஃபா மருத்துவ நகரத்தில், குழந்தைகளுக்கான நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் பேராசிரியர் நூர் உல் ஓவாஸ் ஜிலானி மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த "ஜெமினி அன்ட் வைன்ட்" என்ற தொண்டு நிறுவனத்தின் தலைமையில் நடத்தப்பட்டது.

தற்போது முற்றிலும் குணமடைந்துள்ள இந்த இரட்டையர்கள் நைஜீரியாவில் உள்ள தங்களது வீட்டிற்குத் திரும்பியுள்ளனர். உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகளுக்கு ஆதரவாக மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இந்த அறுவை சிகிச்சை ஒரு முக்கிய மைல்கல் என வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# மீண்டும் ஹார்முஸை மூடியதால் எண்ணெய் விலை அதிகரிப்பு




தற்காலிக அமைதி ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஈரானிய அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். அதேவேளை, ஈரான் மீது மீண்டும் தாக்குதல்களை நடத்தப் போவதாக அமெரிக்க ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத் தினார். மறுபுறம், லெபனானில் இடம்பெறும் போரை நிறுத்துவதாக தான் கொடுத்த வாக்குறுதியை அமெரிக்கா நிறைவேற்றவில்லை என ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப் புடனான ...

அடுத்த நாள் லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டதாக லெபனான் அரசு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. வளைகுடா பகுதியில் தேங் கியிருந்த மசகு எண்ணெய் விநியோகிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பாலும், அமெரிக்கா - ஈரான் ஒப்பந்தத்தின் ஒரு பகு தியாக ஈரான் மீதான தடைகள் நீக்கப்படலாம் என்ற நம்பிக் கையாலும் கடந்த வாரம் எண் ணெய் விலைகள் 8% இற்கும் அதிகமாக சரிந்திருந்தன.

கடந்த திங்கட்கிழமை முதல் இதுவரை 25 மில்லியனுக்கும் அதிகமான ஈரானிய எண்ணெய் பீப்பாய்கள் இந்தத் தடையைத் தாண்டிச் சென்றுள்ளதாக தேசிய ஈரானிய எண்ணெய் நிறுவனத்தின் தலைவர் ஹமித் போவார்ட் தெரிவித்துள்ளார். இதற்கிடையில், ஐக்கிய அரபு அமீரகம், குவைத் மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் கடந்த வாரத்தில் தங்களது வாடிக்கை யாளர்களுக்கு அதிகப்படியான எண்ணெயை வழங்க முன்வந்துள்ளன.

ஈராக் தனது மசகு எண்ணெய் உற்பத்தியை படிப்படியாக நாள் ஒன்றுக்கு 4.2 மில்லியன் முதல் 4.3 மில்லியன் பீப்பாய்களாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)




சந்தைக்கு விடுமுறை என்பதால் அன்று இறுதி விலை நிர்ணயம் செய்யப்படவில்லை.

தற்காலிக அமைதி ஒப்பந்தத்தை இஸ்ரேலும் அமெரிக் காவும் மீறியதாகக் கூறி, ஹார்முஸ் நீரிணையை மீண் டும் மூடுவதாக ஈரான் அறிவித்தது. இதன் காரணமாக, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவ் வழியாகச் சென்ற கப்பல்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்திருந்தது என கப்பல் போக்கு வரத்து தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 34)
## நிறைவுப் பகுதி (Summary Article)




ஒரு மனிதனின் வாழ்நாள் சாதனைகளில் முதன்மையானது அவனது சொந்தக் கனவு இல்லமாகும். "கனவு இல்லம் மெய்ப்பட" என்ற இந்தத் தொடரின் மூலம், ஒரு வீட்டை வெறும் சுவர்களாக மாத்திரமன்றி, பாதுகாப்பான, அழகான மற்றும் சிக்கனமான வாழ்விடமாக மாற்றுவது எப்படி என்பதைப் பார்த்தோம். அதன் இறுதித் தொகுப்பு:

**கனவு இல்லம்: 1. அறிமுகம்**

ஒரு கனவு இல்லம் மெய்ப்பட வேண்டுமாயின், வெறும் ஆசைகள் மட்டும் போதாது. அதற்கு முறையான திட்டமிடல், நிதி மேலாண்மை, தரமான வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப அறிவு ஆகிய நான்கும் பிரதானமானவை ஆகும்.

இவை ஒன்றிணையும் போதே ஒரு வீடு காலத்தால் அழியாத காவியமாக மாறுகிறது.

**கனவு இல்லம்: 2. திட்டமிடல்** (Planning)

எந்தவொரு காரியத்தின் வெற்றிக்கும் திட்டமிடலே அடித்தளம்.

குடும்ப உறுப்பினர்களின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளை ஆராய்தல்.

நிலத்தின் தன்மை மற்றும் திசைகளுக்கு ஏற்ப அறைகளைத் தீர்மானித்தல்.

தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய இடவசதி முகாமைத்துவம்

**கனவு இல்லம்: 3. மதிப்பீடு செய்தல்** (Estimation & Budgeting)

திட்டமிடலுக்கு அடுத்தபடியாக மிக முக்கியமானது நிதி மதிப்பீடு ஆகும்.

கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கு முன்பே துல்லியமான மதிப்பீட்டு அறிக்கை (Estimate) தயாரிப்பது அவசியம்.

இதன் மூலம் வீண் செலவுகள் தவிர்க்கப்பட்டு, பாதகமான நிதி நெருக்கடிகள் இல்லாமல் கட்டுமானத்தை நிறைவு செய்ய முடியும்.

**கனவு இல்லம்: 4. வடிவமைப்பின் முக்கியத்துவம்** (Importance of Design)

சிறந்த வடிவமைப்பு (Design) என்பது வீட்டின் அழகை மட்டுமல்ல, அதன் பயன்பாட்டுத் திறனையும் அதிகரிக்கும்.

நிலத்தின் அளவைச் சரியாகப் பயன்படுத்தி, இடநெருக்கடி இல்லாதவாறு அறைகளை அமைப்பது.

அழகு, வசதி, பாதுகாப்பு ஆகிய மூன்றையும் உள்ளடக்கியதாக வடிவமைப்பு அமைய வேண்டும்.

**கனவு இல்லம்: 5. பொறியியலாளர் பங்கின் முக்கியத்துவம்** (Role of an Engineer)

வீடு கட்டுவதில் தகுதிவாய்ந்த ஒரு சிவில் பொறியியலாளரின் (Civil Engineer) பங்கு இன்றியமையாதது.

கட்டிடத்தின் கட்டமைப்புத் திறன் (Structural Stability) மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல்.

முறையான வரைபடங்கள், அரச அனுமதி மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பேணுதல்.

அனுபவமற்ற மேசன்களால் ஏற்படும் பாரிய தவறுகளைத் தவிர்த்தல்.

**கனவு இல்லம்: 6.மூலப்பொருள்களின் தரத்தின் முக்கியத்துவம்** (Quality of Materials)

தரமான மூலப்பொருட்களே கட்டிடத்தின் ஆயுளைத் தீர்மானிக்கின்றன.

சீமெந்து, மணல், கற்கள் மற்றும் நீர் ஆகியவற்றின் தரம் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும்.

ஆரம்பத்தில் மலிவான பொருட்களைப் பயன்படுத்துவது, எதிர்காலத்தில் அதிக பராமரிப்புச் செலவுகளுக்கு (Maintenance Costs) வழிவகுக்கும்.

**கனவு இல்லம்: 7. இயற்கையான காற்றோட்டத்தின் முக்கியத்துவம்** (Natural Ventilation)

இயற்கையான காற்றோட்டம் உள்ள வீடு, அங்கு வசிப்பவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

ஜன்னல்கள் மற்றும் கதவுகளைச் சரியான திசைகளில் அமைப்பதன் மூலம் காற்று வீட்டிற்குள் சீராக சுழல வேண்டும்.

இது செயற்கைக் மின்விசிறிகள் மற்றும் குளிரூட்டிகளின் (AC) தேவையைக் குறைத்து, மின்சாரச் செலவைச் சேமிக்கும்.

**கனவு இல்லம்: 8. இயற்கையான சூரிய ஒளியின் முக்கியத்துவம்** (Natural Sunlight)

வெளிச்சம் நிறைந்த இல்லமே நேர்மறை ஆற்றலின் (Positive Energy) இருப்பிடம்.

பகற்பொழுதில் வீட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் இயற்கையான சூரிய ஒளி கிடைக்குமாறு வடிவமைக்க வேண்டும்.

சூரிய ஒளி கிருமிநாசினியாகச் செயற்படுவதுடன், பகல் நேரத்தில் மின் விளக்குகளின் பயன்பாட்டையும் குறைக்கும்.

**கனவு இல்லம்: 9. கம்பிகள் பயன்பாட்டின் பங்கு** (Role of Steel Reinforcement)

கான்கிரீட் கட்டிடங்களின் முதுகெலும்பு எஃகு கம்பிகள் (Steel Bars) ஆகும்.

அடித்தளம் (Foundation), தூண்கள் (Columns) மற்றும் கூரை (Slab) ஆகியவற்றில் கம்பிகள் சரியான அளவில் மற்றும் தரத்தில் பயன்படுத்தப்பட வேண்டும்.

பூமி அதிர்ச்சி மற்றும் இதர இயற்கை பேரிடர்களைத் தாங்கும் வலிமையை இந்தக் கம்பிகளே கட்டிடத்திற்கு வழங்குகின்றன.

**கனவு இல்லம்: 10. தேவையற்ற செலவுகளைத் தவிர்த்தல்** (Avoiding Unnecessary Expenses)

பட்ஜெட்டைத் தாண்டிச் செலவுகள் அதிகரிப்பதைத் தடுக்க விழிப்புணர்வு அவசியம்.

கட்டுமானத்தின் போது அடிக்கடி மாற்றங்களைச் செய்வதைத் (Alterations) தவிர்த்தல்.

தேவைக்கு அதிகமான ஆடம்பர அலங்காரங்கள், பிரம்மாண்டமான வெற்று இடங்களைக் குறைத்தல்.

**கனவு இல்லம்: 11. சிக்கனமான வீட்டுக்கான அடிப்படை** (Basics of an Eco-friendly & Economical House)

குறைந்த செலவில் நிறைவான வீடு என்பது சாத்தியமே.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய (Locally available) தரமான பொருட்களைப் பயன்படுத்துதல்.

தேவைக்கேற்ற அளவிலான (Compact and Functional) அறைகளை வடிவமைத்தல்.

பராமரிப்புச் செலவு குறைந்த எளிய தொழில்நுட்பங்களைக் கையாளுதல்.

**கனவு இல்லம்: 12. முடிவுரை**

"கனவு இல்லம் மெய்ப்பட" என்பது வெறும் தற்காலிகக் கட்டிடம் அல்ல அது தலைமுறைகள் கடந்து வாழப்போகும் ஒரு சொத்து.

சரியான பொறியியல் வழிகாட்டல், முறையான தரக்கட்டுப்பாடு மற்றும் இயற்கையோடு இயைந்த வடிவமைப்பு ஆகியவற்றைச் சரியாகப் பயன்படுத்தினால், எவரும் தங்களின் பட்ஜெட்டிற்குள் ஒரு பாதுகாப்பான, அழகான, சொர்க்கப் பூமியை உருவாக்க முடியும்.

விழிப்புணர்வுடன் செயற்படுவோம், கனவு இல்லத்தை நனவாக்குவோம்!

(முற்றும்)

**இலங்கை பொறியியலாளர் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

23.06.2026
ஆனி 9, செவ்வாய்க்கிழமை
நவமி முன்னிரவு 8.53 மணிவரை

அத்தம் பிற்பகல் 4.20 மணிவரை
சுப நேரம் -10.24-11.54 மணிவரை
இராகு காலம் -2.54-4.24 மணிவரை

சந்திராஷ்டமம்- சதயம், பூரட்டாதி.

வளவன்


மேஷம்

நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


கடகம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்,கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு.


துலாம்

ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம்,புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள்,வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.


மகரம்

ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.


ரிஷபம்

அரசு வழியில் அனுகூலமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.


சிம்மம்

குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எண்ணங்கள் எளிதில் கைகூடும்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


கும்பம்

மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பண விரயங்கள் மேலோங்கும் நாள்.


மிதுனம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், வருமானம் திருப்தி தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


கன்னி

குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், கற்பனை மிகுதியான நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.


தனுசு

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


மீனம்

களஸ்திர நன்மையுண்டு, விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணையலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**அடைய முடியாத ஆசைகளையும் இலட்சியங்களையும் தவிர்த்துவிடுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02 XXVi

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்



முல்லைத்தீவில் குருந்தூர்மலை, வவுனியாவில் வெடுக்குநாறி, திருகோணமலையில் திருக்கோணேஸ்வரமும் கன்னியா வெந்நீரூற்றும் என சைவ சமயத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களை ஆக்கிரமித்து அங்கு பௌத்த விகாரைகளை அமைப்பது பௌத்த பீடங்களின் இலக்காக இருக்க, அவர்களின் பௌத்த மதவாதத்திற்கு தொல்லியல் திணைக்களம் துணை போவது பற்றி கடந்த தரிசனத்தில் கண்டோம்.

தவிர, இந்து மதக் கோட்பாடுகளின் பின்னணியைக் கொண்ட பௌத்தர்கள் சைவாலய தரிசனத்தை ஒருபோதும் தவிர்ப்பதில்லை.

யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வருகின்ற பௌத்த சிங்கள மக்கள் நல்லூர்க் கந்தசுவாமியார் ஆலயத்தையும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தையும் தரிசிப்பதைத் தங்களின் பெரும் பேறாகக் கருதுகின்றனர்.

அதிலும் இந்த நாட்டின் ஆட்சித் தலைவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் போது, நல்லூர்க் கந்தனிடம் சென்று வழிபாடு செய்வதை ஒரு போதும் தவிர்த்ததில்லை. இங்கு தான் ஒரு விடயத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அதாவது, நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திற்குள் செல்வதாக இருந்தால், ஆண்கள் மேலாடை களைந்து செல்வது கட்டாயமானது.

இந்த நிபந்தனை மகோற்சவ காலத்தில் அங்கு கடமையாற்றுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பொதுவானது.

அந்த வகையில் நல்லூர் முருகன் ஆலயத்தை வழிபட வருகை தந்த முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ ,மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமது சேட்டைக் கழற்றி நல்லூர் முருகன் ஆலயத்திற்குச் சென்று வழிபாடாற்றினர்.

ஆம், இந்த நாட்டின் ஆட்சித் தலைவர்களாக இருந்தாலும் ஈழத் தமிழர்களின் ஆட்சித் தலைவனாகிய நல்லூர் முருகனிடம் வருவதாக இருந்தால், அங்கு இருக்கக் கூடிய நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

அவ்வாறு நிறைவேற்றினால் மட்டுமே நம் தமிழ்த் தலைவன் நல்லூர் முருகனைச் சந்திக்க முடியும்.

ஒருமுறை இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஒரே ஒரு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் என்பது இங்கு குறித்துரைக்கப்பட வேண்டும்.

இங்ஙனம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் நல்லூர்க் கந்த சுவாமியாரின் கோயிலுக்குச் செல்வதாக நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், வட இந்தியாவில் ஆலயப் பிரவேசத்தின் போது ஆண்கள் மேலாடை களைவது மரபன்று.

இதன் காரணமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது மேலாடையைக் களைந்து செல்வது பொருத்தமற்றதாகவும் பாதுகாப்பிற்கும் அது ஏற்புடையதற்றதாகவும் கருதப்பட்டது.

எனினும் ஆண்கள் மேலாடையுடன் நல்லூர் முருகனிடம் செல்ல முடியாது என்ற நிபந்தனை இந்தியப் பிரதமருக்கும் பொருந்தும் என்ற அடிப்படையில், நல்லூர் முருகன் ஆலயத்திற்குச் செல்கின்ற நிகழ்ச்சி நிரல் மாற்றியமைக்கப்பட்டு பிரதமர் மோடி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று அங்கு வழிபடுகின்ற ஏற்பாடு செய்யப்பட்டது.


இத் தருணத்தில், மகாத்மா காந்தியடிகள் கீரிமலை நகுலேஸ்வரத்திற்கு வந்தமை குறித்தும் காந்தியடிகளின் அஸ்தியில் ஒரு பகுதி கீரிமலைக் கடலில் கரைக்கப்பட்டது என்ற தகவலும் பிரதமர் மோடிக்கு எடுத்துக் கூறப்பட்ட போது, அவர் அதிசயித்து நின்ற தான தகவல்களும் உண்டு.


இங்கு நாம் கூறவருவது இந்துத்துவத்தில் - இந்து சமய வழிபாட்டில் மிகவும் உறுதியாக இருக்கக் கூடிய பிரதமர் மோடி தனது மேலாடையைக் களைந்து நல்லூர் முருகன் ஆலயத்திற்குச் செல்லாத போது, இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளாக இருந்த மகிந்த ராஜபக்ஷ , மைத்திரிபால சிறிசேன , ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமது மேலாடை களைந்து நல்லூர்க் கந்தப் பெருமானை கண்டு தரிசித்தனர் என்றால், எங்கள் ஈழத்து சைவத் தமிழ்ப் பண்பாட்டுடன் இணைந்து போவதில் சிங்களத் தலைவர்கள் எவருக்கும் எந்த இடைஞ்சலும் இருக்கவில்லை என்பது உறுதியாகிறது.

இது தவிர, தென்னிலங்கையில் இருந்து வடக்கிற்கு வருகின்ற பௌத்த சிங்கள மக்கள், நல்லூர் முருகனைத் தரிசிப்பதற்காகச் செல்கின்ற அந்த ஒழுங்கைப் பார்க்கும் போது நம் சைவசமயத்தவர் கூட அப்படி இல்லை என்று எண்ணுமளவில் அத்துணை பய பக்தி .அவர்களிடம் மேலோங்கி நிற்கும்.

உண்மை. அர்ச்சனைப் பொருட்களை தோளுக்கு மேல் ஏந்திய வண்ணம் அவர்கள் நல்லூர் முருகனின் கோபுர வாசலைத் தாண்டி உள்நுழையும் போது, அவர்களிடம் இருக்கக் கூடிய பக்தியின் உச்சத்தை- சைவ சமயம் மீது அவர்கள் கொண்டுள்ள அளவு கடந்த மதிப்பை நினைக்குங்கால் ஏன் தான் இப்படியாயிற்று. நாமும் பௌத்தமும் மோத வேண்டிய தேவை எதற்கானது என்ற சிந்தனை சிரசைத் தொட்டுக் கொள்ளும்.

(நாளை தொடரும்)





Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1070





சிறு வயதுப் பெண்களாகிய நாம் சொல்வதை உன் பெரியப்பாவைப் போன்ற கிழவர்கள் கேட்க மாட்டார்கள். என் தம்பி அருள்மொழிவர்மன் மூலமாகத்தான் இந்தச் சண்டை நேராமல் தடுக்கமுடியும். திருமலை! நீ போனவன் ஏன் திரும்பி வந்தாய்? அருள்மொழி இப்போது எங்கே இருக்கிறானாம்?"

"திருவாரூரிலிருந்து நேற்றிரவே புறப்பட எண்ணியதாகக் கேள்வி. ஆனால் வழியெல்லாம் ஒரே வெள்ளக்காடாக இருப்பதால் வர முடியவில்லையாம். நானும் பழையாறைக்கு அப்பால் போகப் பார்த்து முடியாமல் திரும்பி வந்தேன். குடமுருட்டி உடைப்பெடுத்து ஒரே சமுத்திரமாகச் செய்திருக்கிறது"

"எப்படியும் வெள்ளம் வடியும். அதற்குப் பிறகு அருள்மொழி இந்த வழியாக வந்துதானே ஆகவேண்டும்? அதுவரை காத்திருக்க வேண்டியதுதான். அதற்குள் தஞ்சையில் ஏதேனும் விபரீதம் நேர்ந்து விடப் போகிறதே என்று கவலையாயிருக்கிறது.

திருமலை! நீ உடனே தஞ்சாவூர் திரும்பிப் போய்க் கொடும்பார் மன்னரைக் கண்டு நான் சொல்லும் செய்தியைச் சொல்ல முடியுமா? அருள்மொழி வரும் வரையில் தஞ்சைக் கோட்டையை முற்றுகையிட வேண்டாம் என்று தெரிவிப்பாயா?"

"அக்கா! நானும் இவருடன் தஞ்சைக்குப் போகட்டுமா?" "நீ இந்த மனிதருடன் போய் என்ன செய்வாய், என் கண்ணே?" "போய் என் பெரிய தகப்பனாருடன் சண்டை பிடிப்பேன்." "என்னவென்று சண்டை பிடிப்பாய்? உன் பேச்சை அவர் கேட்டுச் சண்டையை நிறுத்தி விடுவாரா?"

"சண்டையை நிறுத்தினால் நிறுத்தட்டும் நிறுத்தா விட்டால் எப்படியாவது நாசமாகப் போகட்டும். என் பெயரை இதில் இழுக்க வேண்டாம் என்று வற்புறுத்துவேன்."

"உன் பெயரை இழுக்கிறார்களா? அது எதற்காக?" "சற்று முன் இந்த வீர வைஷ்ணவர் சொன்னதை நீங்கள் கேட்கவில்லையா, அக்கா?" என்று வானதி கூறி வெட்கத்தினால் தலை குனிந்தாள்.

"உன்னைப் பற்றி யார் என்ன சொன்னார்கள்? திருமலை! நீ இந்தப் பெண்ணைப்பற்றி என்ன சொன்னாய்?" "இவரைப் பொன்னியின் செல்வருக்கு மணம் செய்விக்க வேண்டும் என்று சேனாதிபதி வற்புறுத்துவதைப் பற்றிச் சொன்னேன் அல்லவா? அதைக் குறிப்பிடுகிறார் போலிருக்கிறது!"

"வானதி! அதில் என்ன உனக்கு ஆட்சேபம்? பொன்னியின் செல்வனை மணந்து கொள்வதற்கு உனக்குப் பிரியம் இல்லையா?"

"பிரியம் இருக்கிறதோ, இல்லையோ. அதைப்பற்றி இப்போது என்ன பேச்சு? கல்யாணத்தையும், பட்டங் கட்டுவதையும் என் பேரில் தந்தை சேர்த்துப் பிரஸ்தாபிப்பதைத்தான், நான் ஆட்சேபிக்கிறேன். என்னைச் சோழ சிம்மாசனத்தில் ஏற்றுவிப்பதற்காகவே என் பெரிய தந்தை இந்தச் சண்டையை ஆரம்பிக்கிறார் என்றல்லவா ஏற்படுகிறது?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மேகம் கறுக்கையிலே



(20.06.2026 தொடர்ச்சி)

"என்ன செய்யப் போறே?" "மழை பெய்யப் போறேன்!" என்றது மேகம்!

மாலைப்பொழுதுலதான் நான் மொட்டைப் மேலே நின்னு தோகை விரித்தாடுவேன் நான் ஆடுனாலே அது மழை வருவதற்கான அறிகுறின்னு எல்லாரும் சொல்லுவாங்க கீழ்திசையில் ஒரு புறம் வானவில் தோன்ற, புறம் வானம் பூத்தூவலாய்த் தூற, மாலை இளம் மஞ்சள் வெயிலின் பின்னணியில் ஒரு மயில் ஆடுவதைக் காண்பது கொள்ளை அழகல்லவா நீ மாலையில் வந்து பெய்!" என்றது மயில்.

மேகம் யோசித்தது. 'மாலைப்பொழுது தானே ஆடல், பாடல் முதலான மனதை மயக்கும் கலைகளுக்கான நேரம்?. மயில் சொல்வதும் சரிதானே!.' மேகத்திற்கு மயிலின் மீது பரிவு வந்தது.

"சரி.. மாலையில் வந்து பெய்கிறேன்". என்றபடி அங்கிருந்து நகர் ந்து சென்றது.

மாலையில் மழை பெய்ய எண்ணி மேகம் அந்தப் பகுதியில் மீண்டும் திரண்டது. அப்போது மைனா, புறா, கிளி, காகம் முதலான பறவைகள் அந்த மேகத்தை வழி மறித்தன. "என்ன செய்யப் போறே?" "மழை பெய்யப் போறேன்" என்று மேகம் சொன்னது!

"பகல் பூராவும் இரை தேடி விட்டு இப்பத் தான் திரும்பிப் போய்க் கிட்டிருக்கிறோம்!.

இப்ப நீ மழை பெய்ஞ்சா ல் எங்களால் மழைக்குள்ள பறக்க முடியாது! அங் கங்க அடையற மாதிரிதான் இருக்கும்!. இறக்கையெல்லாம் நனைஞ்சுடும்! பறக்கக் கஷ் டமாயிருக்கும்!. நாங்க பாதுகாப்பா கூடு போய்ச் சேர வேண்டாமா?." என்று கேட்டன அவைகள்.

மேகம் யோசித்தது. 'இந்த பெரிய பறவைகளின் வருகையை எதிர்பார்த்துக் குஞ்சுகள் எல்லாம் ஆவலாய்க் காத்துக்கிட்டு இருக்கும்!

அதுக்கு நான் இடைஞ்சலா இருக்கலாமா?' அந்தப் பற வைகளின் வார்த்தைகளிலும் நியாயம் இருப்பதாகப் பட்டது! "சரி நான் அப்புறமா வந்து பெய்யறேன்" என்ற படி அங்கிருந்து நகரந் த்து சென்றது மேகம்!

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இறந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையே மரணத்துக்கான போராட்டம் தான் புரட்சி.

– பிடல் காஸ்ட்ரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## செம்மணி மனிதப் புதைகுழி தக்க சாட்சி சோமரத்ன

செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளதென்ற தகவலை முதலில் தெரிவித்தவர் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ.

மாணவி கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, செம்மணி மனிதப் புதைகுழி விடயம் தொடர்பில் முதலில் தகவல் தெரிவித்திருந்தார்.

செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளதென அவர் கூறியதும் ஒவ்வொரு இரவுப் பொழுதிலும் செம்மணிப் பகுதியில் வாகனங்கள் ஓடித் திரிவதையும் அப்பகுதியில் படையினரின் நடமாட்டம் அதிகரித்திருந்ததையும் பொதுமக்கள் அறிந்திருந்தனர்.

எனினும் அன்றைய சூழலில் அதுபற்றி யாரிடமும் தெரிவிக்க முடியவில்லை.

இந்நிலையில் செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளது எனக் கூறிய சோமரத்ன ராஜபக்ஷவை நீதிமன்றின் உத்தரவில் செம்மணிக்கு அழைத்து வந்து, மனிதப் புதைகுழி உள்ள இடத்தை இனங்காட்டுமாறு கேட்கப்பட்டது.

இருந்தும் சோமரத்ன இனங்காட்டிய இடத்தில் மனிதப் புதைகுழிகள் இருக்கவில்லை.

அதனோடு அந்த விவகாரம் அப்படியே அமிழ்ந்து போனது. செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளது எனக் கூறிய சோமரத்ன வேண்டுமென்றே அவ்வாறு கூறினார் என்பதாகக் கதை முடிக்கப்பட்டது.

ஆனால் நிலமகள் எந்தக் குற்றங்களையும் மறைப்புச் செய்பவள் அல்ல.

ஆம், செம்மணி சித்துப்பாத்தி மயானப் பகுதியில் கட்டிட அமைவுக்காக அத்திபாரம் வெட்டிய போது, அங்கு மனித என்புக் கூடுகள் வெளிவந்தன. அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

அதிலிருந்து ஆரம்பித்த செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நானூறு மனித என்புத் தொகுதிகளை மீட்கின்ற அளவில் விரிந்து செல்ல, அகழ்வுப் பணிகள் தொடர்கின்றன.

ஆக, சோமரத்ன ராஜபக்ஷ கூறிய செம்மணி மனிதப் புதைகுழி நிஜமானது என்பது இப்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, மரண தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் சோமரத்ன ராஜபக்ஷ சிறையில் இருந்தபடி இந்த நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எழுதிய கடிதங்கள் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் பல உண்மைகளை வெளிப்படுத்தக்கூடியவை.

ஆம், ஜனாதிபதிக்கு அவர் எழுதிய கடிதத்தில் மாணவி கிருஷாந்தி கொலையுடன் தொடர்புபட்ட அதிகாரிகள், அந்தக் காலப்பகுதியில் செம்மணிக்குக் கொண்டு வரப்படும் சடலங்கள், அவை புதைக்கப்படுகின்ற விடயங்கள் எனப் பலவற்றை அவர் கூறியுள்ளார்.

ஆக, செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் உண்மைகள் வெளிவர வேண்டுமாயின், அதற்கு லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் வாக்குமூலம் – சாட்சியம் மிகவும் அவசியமும் முக்கியத்துவமும் வாய்ந்ததாகும்.

## இலங்கை தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2026 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழு நேரகற்கை நெறிகள் 06.07.2026 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.

இக்கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு. சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர் (ICT Technician), மின்னிணைப்பாளர் (Electrician), கணிய அளவையியலாளர் (Quantity Surveyour), விருந்தினர் வரவேற்பாளர் (Gest Relation Officer), வெதுப்பாளர் (Baker), சமையலாளர் (Professional Cookery), அறை பராமரிப்பு சேவையாளர் (House Keeping Services), நீர்க்குழாய்ப் பொருத்துநர் (Plumber), முச்சக்கர வண்டி பொறிவலர் (Three Wheeler Technician), அலுமினியம் பொருத்துனர் (Aluminium Fabricator), உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர் (Food & Berverage), குழந்தைபராமரிப்பாளர் (Childcare Giver), பெண்கள் சிறுவர்களிற்கான ஆடைவடிவமைப்பாளர் (Dress Maker), சிகையலங்கரிப்பாளர் (Hair Dresser), அழகுக்கலை வல்லுநர் (Beautician), விரைவுசேவை உணவு வழங்குநர் (Quick Service Resturant), முதியோர் பராமரிப்பாளர் (Care Giver), டீசல் பெற்றோல் வாகன இயந்திர பொறிவலர் (Automobile Technician), கட்டட நிர்மான உதவியாளர் (Construction Craftsman), கணனி வன்பொருள் திருத்துனர் (Computer Hardware Technician), கணனி படவரைநர் (Draughtsperson), குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி திருத்துனர் (Refrigiration & Air Conditioner Mechanic), மரவேலை தொழினுட்பவியலாளர் (Wood Craftsman furniture) போன்ற கற்கைநெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

(இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ - 4) சான்றுதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 03.07.2026 திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ளமுடியும்.

மேலதிக விபரங்களினைப் பெற்றுக்கொள்வதற்கு 0212227949, 0710318737, 0776139307 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என யாழ்ப்பாணம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். *(ம-7)*

## ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு தற்காலிகமாக இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் இயங்கிவந்த ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு தற்காலிகமாக இடமாற்றப்படுவதாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிவிப்பில்,

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவந்த எமது பிராந்தியத்தின் கீழுள்ள ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு திருநெல்வேலியானது இன்று செவ்வாய்க்கிழமை 23 திக்தியிலிருந்து நல்லூர் பிரதேச சபை, உப அலுவலகம், நல்லூரின் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கும் என்பதை பொதுமக்களிற்கு அறியத் தருகிறேன் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. *(ம-7)*

## பன்மொழி திரைப்பட விழா யாழில் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம் தனது இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்துகின்ற பன்மொழி திரைப்பட விழா நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது .

இல.18/2,அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ள இவ் விழாவில் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஜமீலா (ரஷ்யா), ஒருத்தி (தமிழ்), பிரதான வீதியில் ஒரு கடை (செக்கோஸ் லோவாக்கியா), பசி (நோர்வே), அந்நியன் (பிரெஞ்சு), வீடும் வெளியும் (வங்காளம்), சுரங்கம் (பிரெஞ்சு), விசித்திரமான பையன் (ஆங்கிலம்) ஆகிய எட்டு நாவல்களின் திரை வடிவம் காண்பிக்கப்படவுள்ளது.

இலவசக் காட்சியாக நடைபெறவுள்ள இந்த திரைப்பட விழா ஒவ்வொரு நாளும் பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பமாகும். 27 ஆம் திகதி சனிக்கிழமை மட்டும் இரண்டு காட்சிகள் பி.ப. 2.30 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் இடம் பெறும். அதேபோல் திங்கட்கிழமை காட்சி மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

நமது பிரதேசத்தில் நல்ல திரைப்பட இரசனையைப் பரவலாக்கும் இம்முயற்சியில் திரைப்பட ஆர்வலர்களை இணைந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

திரைப்பட விழாவின் ஆரம்ப நிகழ்வில் யாழப்பாண திரைப்பட கழகத்தின் இணைப்பாளர் அ.யேசுராசா, யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சி. ரகுராம், யாழ்ப்பாண திரைப்படக் கழகத்தைச் சேர்ந்த இ.கிருஷ்ணகுமார் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். *(ம-7)*

# கிளிநொச்சியில் கோர விபத்து

## ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஓய்வுநிலை அதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அருகாக பயணித்தவேளை அதிவேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த அதிபரை வீதியால் பயணித்தவர்கள் மீட்டு உடனடியாக நோயாளர் காவுவண்டி ஊடாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்
# (15.06.2026 - 16.07.2026வரை)

ஜோதிடக் கலைமணி
**சிவல்புரி சிங்காரம்**

## சுபச்செலவுகள் அதிகரிக்கும்



**கும்ப இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி தாஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உச்சம் பெற்ற குருவின் பார்வை சனி மீது பதிவதால் இரண்டாமிடம் புனிதமடைகின்றது. ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. எனவே குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும், இடமாற்றம். வீடு மாற்றம் வருவதற்கான வாய்ப்பு உண்டு. பொருளாதார நிலை திருப்தி தரும். இருப்பினும் ஆறில் குரு இருந்தால் ஊரில் பகை என்பார். எனவே நிதானத்துடன் செயற்படுவது நல்லது.

**ரிஷப - செவ்வாய்**

ஆனி மாதம் 5ஆம் திகதி (19.6. 2026) அன்று செவ்வாய் ரிஷப இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது நல்ல சந்தர்ப்பங்கள் இல்லம் தேடி வரும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு உண்டு, தொழில் வளர்ச்சியும், எதிர்பார்த்த இலாபமும் கிடைக்கும். இடம், பூமி விற்பனையால் இலாபம் உண்டு, எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். கடன்கள் வசூலாகி கவலையைப் போக்கும். பெற்றோரின் ஆதரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பர். நம்பிக்கைகள் நடைபெறும் நேரம் இது.

**சிம்ம-சுக்ரன்**

கடக இராசியில் சஞ்சரிக்கும் சுக்ரன், ஆனி 21 ஆம் திகதி (6.7.2026) அன்று சிம்ம இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன், அவர் சப்தம ஸ்தானத்திற்கு வரும் பொழுது திருமணம் போன்ற காரியங்கள் இல்லத்தில் நடைபெறும், தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் இரு ந்து அனுகூலமான தகவல் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். உற்சாகத்தோடு பணி புரிவீர்கள்.

**சனி வக்ரம்**

ஆனி 31ஆம் திகதி (15.7.2026) அன்று மீன இராசியில் சனிவக்ரம் பெருகிறார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 12ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். உங்கள் இராசிநாதன் சனி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. மனப்பயம் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் விரயங்கள் வந்து சேரும். மருத்துவச் செலவுகள் அதி




கரிக்கும். குலதெய்வ வழிபாடும், சனீஸ்வரர் வழிபாடும் இக்காலத்தில் உங்களுக்குத் தேவை.

உங்கள் இராசிக்கு 4,8,11 ஆகிய இடங்களில் சனியின் பார்வை பதிகிறது. எனவே இக்காலத்தில் தாயின் உடல் நலம் சீராகும். தனவரவிற்கு பஞ்சமில்லை என்றாலும், விரயங்கள் மிக அதிகமாக இருக்கும். வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும். இளைய சகோதரத்தோடு இருந்த நெருக்கம் குறையும். உடன்பிறப்புகளால் ஒருசில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. பிறரை நம்பி ஏமாறும் வாய்ப்பு உண்டு.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பாதை புலப்படும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு உண்டு. கலைஞர்களுக்கு கௌரவம் கிடைக்கும். மாணவ மாணவிகளுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. பெண்களுக்கு சுபச்செலவுகள் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் நாட்டம் செல்லும்.

இம்மாதம் வராகி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:**-ஜூன் 25, 26, 29, 30, ஜூலை:- 7, 8, 12, 18.

**மகிழ்ச்சி தரும் வண்ணம்.** கிரே.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

கடக இராசியில் உச்சம்பெற்று சஞ்சரிக்கும் குரு. 15.6.2026 முதல் 4.7.2026 வரை சுக்ரனுடன் இணைந்திருக்கிறார். உங்கள் இராசிக்கு தன-லாபாதிபதியானவர் குரு. பாக்கியாதிபதியானவர் சுக்ரன். எனவே இக்காலத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீடு வாங்குவது போன்றவற்றில் ஆர்வம் கூடும். வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரிய வாய்ப்புகள் வந்துசேரும்.



**மீன இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பஞ்சம ஸ்தானத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவதால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். ஆதரவு தருவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். தொழில் வளர்ச்சியில் இருந்த குறுக்கீடு அகலும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். பொருளாதாரநிலை உச்சம் பெறும். இல்லத்தில் சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் கூடுதல் பொறுப்பை வழங்குவர்.

**ரிஷப - செவ்வாய்**

ஆனி மாதம் 5ஆம் திகதி (19.6.2026) அன்று செவ்வாய் ரிஷப இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்பொழுது தனவரவு தாராளமாக வந்துசேரும். தொழில் முன்னேற்றத்திற்கு முதலீடு செய்ய, கேட்ட இடத்தில் தொகை கிடைக்கும். சகோதர வழி ஒற்றுமை திருப்திகரமாக அமையும். தந்தைவழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். இதுவரை மற்ற சகோதரர்களிடம் காட்டிய பாசத்தை பெற்றோர் உங்களிடமும் காட் டுவர். பூர்வீக சொத்துக்களை வைத்துக் கொள்ளலாமா? கொடுத்துவிட்டுப் புதிய சொத்துக்கள் வாங்கலாமா? என்று சிந்திப்பீர்கள். நட்பால் நன்மை கிடைக்கும் நேரம் இது.

**சிம்ம- சுக்ரன்**

கடக இராசியில் சஞ்சரிக்கும் சுக்ரன் ஆனி 21 ஆம் திகதி 5.7.2026 அன்று சிம்ம இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு

## பஞ்சம குருவால் பணவரவில் திருப்தி

அதிபதியானவர் சுக்ரன். 8இற்கு அதிபதியான அவர் 6இன் இடத்திற்கு வருவது யோகம்தான். கெட்டவன் கெட்டில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கேற்ப யோக பலன்கள் வரப் போகிறது. எதிர்பாராத நல்ல திருப்பங்களும் சம்பவங்களும் நடைபெறும். உத்தியோகத்தில் திடீர் பதவி உயர்வும், திரவிய இலாபமும் உண்டு. புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். பழைய கடன்கள் பைசல் ஆகும். மாறுது மருத்துவத்தால் உடல் நலன் சீராகும்.

**சனி வக்ரம்**

ஆனி 31ஆம் திகதி (15.7.2026) அன்று மீன இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு லாபாதிபதியாகவும். விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனிபகவான்.விரயாதிபதி வக்ரம்பெறுவது நன்மைதான் என்றாலும், லாபாதிபதியாகவும் சனி பகவான் இருப்பதால் பண நெருக்கடி அதிகரிக்கும். கடன், கைமாற்று வாங்கும்




சூழல் உருவாகும்.

உங்கள் இராசிக்கு 3,7,10 ஆகிய இடங்களில் சனியின் பார்வை பதிகிறது. எனவே உடன்பிறப்புகளின் குணங்களில் மாற்றம் ஏற்படும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்ய இயலாது. கல்யாண முயற்சியில் தாமதம் ஏற்படும். கடமையில் தொய்வு ஏற்படும். தொழில் பங்குதாரர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்துகொள்ள மாட்டார்கள். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை. குடும்ப ஒற்றுமை குறையாமல் பார்த்துக்கொள்வது நல்லது. உத்தியோக மாற்றம் உள்ளத்தை வாடவைக்கும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் புதிய பாதை புலப்படும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு ஏற்றமும், இறக்கமும் வந்துசேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகள் நுணுக்கங்களைக் கற்றுக்கொடுப்பர். கலைஞர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். மாணவ-மாணவிகளுக்கு விருதும், பாராட்டும் உண்டு. பெண்களுக்கு மனக்கவலை தீரும். பணப் புழக்கம் அதிகரிக்கும்.

இம்மாதம் பைரவர் வழிபாடு வளர்ச்சி தரும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:**- ஜூன்: 16, 17, 27, 28, ஜூலை: 3, 4, 9, 10, 14,

**மகிழ்ச்சி தரும் வண்ணம்:**- பொன்னிற மஞ்சள்.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

கடக இராசியில் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் குரு 15.6.2026 முதல் 4.7.2026 வரை சுக்ரனுடன் இணைந்து சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. எதிரிகளின் பலம் மேலோங்கும். பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் தாமதம் ஏற்படும். அண்ணன், தம்பிகளுக்குள் அரசல் புரசல் ஏற்பட்டு குடும்ப ஒற்றுமை குறையலாம். மண வருத்தம் அதிகரிக்கும் நேரம் இது. புது முயற்சிகளில் ஈடுபடும்பொழுது அனுபவஸ்தர்களின் ஆலோசனையை கேட்டுக்கொள்வது நல்லது. குரு சுக்ர வழிபாடும் தேவை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதச்...

அரசாங்கத்தின் எதிர்கால பாதுகாப்பு மற்றும் சட்ட மறுசீரமைப்புகள் குறித்து நேற்றுக் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக, திட்டமிடப்பட்ட குற்றங்களை ஒடுக்குவதற்கும் பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் புதிய சட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்படும்.

நீண்டகாலமாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கடுமையான விமர்சனங்களுக்குள்ளாகியிருக்கும் தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக தற்போதைய சமூகத்துக்குப் பொருத்தமான வகையில் இந்தப் புதிய சட்டக் கட்டமைப்பு அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

இதன்மூலம் திட்டமிடப்பட்ட குற்றக் கும்பல்களை ஒடுக்குவதற்கும், நாட்டின் சாதாரண குடிமக்களின் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

## பரந்தன் வீதியில்..

புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமி (வயது-66) என்பவரே உயிரிழந்தவராவார்.

முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த கார் ஒன்று, அதே திசையில் முன்னால் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## குடும்பஸ்தர் மீது...

தாக்குதலில் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அயல்வீடுகளைச் சேர்ந்த இருவருக்கிடையே மோதல் ஏற்பட்டது. இந்நிலையில் ஒருவர் மற்றையவர் மீது கத்தியால் கொடூரமாகத் தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த குறித்த நபர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,104)

## துப்பாக்கி வெடித்...

சோதனைச் சாவடியில் நேற்றுத் திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் மன்னார் சவுத் பார் இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த ஜெயத்திலக (வயது-46) எனும் இராணுவ வீரரே உயிரிழந்தவராவார்.

துப்பாக்கி வெடிப்பால் படுகாயமடைந்த குறித்த இராணுவ வீரர் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## புதிதாக 7 என்புக்...

நேற்றுத் திங்கட்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் தலைமையில் நடைபெற்றது.

நேற்றைய அகழ்வில் மூன்று என்புக்கூடுகள் ஒரே நேர்கோட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள அதே வேளை, நேர்சீரின்மையாக 09 என்புக்கூடுகள் வரையில் அடையாளம் காணப்பட்டு அவற்றைச் சுத்தப் படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அதனடிப்படையில் இதுவரையிலான அகழ்வுப் பணிகளின்போது, 412 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 390 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## கிணற்றில்...

கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த அறிவரசன் [illegible] என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

இது குறித்து தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட வருகின்றனர். (ம-7,316)

## சிறை செல்ல..

யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 2024 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ மற்றும் ராஜபக்ஷக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து தற்போதைய அரசுக்கு எதிராகத் திட்டமிட்ட சூழ்ச்சிகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இதுவரை காலமும் இந்த மூன்று தரப்பினருமே மாறி மாறி நாட்டை ஆட்சி செய்தார்கள்.

கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தால் மகிந்த ராஜபக்ஷவின் காலத்து ஊழல்வாதிகளைப் பாதுகாப்பார்.

அதேபோன்று மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தால் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்து ஊழல்வாதிகளைப் பாதுகாப்பார்.

இதுவரை காலமும் இந்த உடன்பாட்டின் அடிப்படையிலேயே நாட்டை ஆண்டனர். எனினும் கடந்த 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் இவர்களின் பரம்பரை ஆட்சி முறைமை ஒட்டுமொத்தமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

கடந்த காலங்களில் தாங்கள் செய்த ஊழல்களுக்காக நிச்சயம் சிறைக்குச் செல்ல நேரிடும் என்பதை இவர்கள் நன்கு அறிவார்கள்.

அதன் காரணமாகவே, கடந்த காலங்களில் ஒருவரையொருவர் கடுமையாக மோதிக்கொண்டவர்கள் இன்று சுயநலத்துக்காக ஒன்றிணைந்து அரசியல் கூட்டணியமைத்துள்ளார்கள்.

அதேபோல், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டதைத் தங்களின் பிரதான அரசியல் பிரசாரமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள் என்றார். (ம-7)

## சர்வதேச சட்டங்..

பிட்டார்.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் எஸ்.போல் கபூருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இதனைச் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலின்போது, அமெரிக்கா இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆதரவிற்கு அமைச்சர் விஜித ஹேரத் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார். குறிப்பாக, மத்திய கிழக்கில் நிலவிய யுத்த சூழ்நிலைக்கு மத்தியில் இலங்கை எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவிற்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார். அத்துடன், இலங்கைக் கடற்படை மற்றும் விமானப்படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட கடல் சார் ரோந்து கப்பல்கள் மற்றும் விமானங்களுக்காகவும் அரசாங்கத்தின் நன்றியினை தெரிவித்துக் கொண்டார். (ம-7)


மஹஜன சம்பத — NLB
திகதி 2026.06.22 | சீட்டிழுப்பு இலக்கம் 6226
T 9 8 5 7 2 4

அத சம்பத
T 5 7 2 4 | சீட்டிழுப்பு இலக்கம் 0801

சுப தவசக் — NLB
திகதி 2026.06.22 | சீட்டிழுப்பு இலக்கம் 0342
கன்னி 32 33 40 | 0477

தன நிதானய
திகதி - 2026.06.22 | சீட்டிழுப்பு இலக்கம் - 2256
A 07 22 37 52 A

மெகா பவர்
திகதி 22/06/2026 | சீட்டிழுப்பு இலக்கம் 2574
Y 11 03 13 51 64

ஜய — NLB
திகதி 2026.06.22 | சீட்டிழுப்பு இலக்கம் 0494
U 6 9 2 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4468 | சீட்டிழுப்பு திகதி 22.06.2026
J 07 26 45 67

ஹந்தஹன — HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.06.22 | சீட்டிழுப்பு இலக்கம் 1535
தனுசு 25 37 45 58 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பிர் டென் சம்பத் — DLB
22.06.2026 | வெற்றி வாரம் 0934
A 2 3 6 2 5 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,125,034.40

SUPER BALL — DLB
சீட்டிழுப்பு வாரம் 3200 | 25000 பணப் பரிசு 57958
சீட்டிழுப்பு திகதி 2026.06.22 | தினம் திங்கட்கிழமை
15 27 28 61 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 137,156,348.80

சனிதா — DLB
திகதி 22.06.2026 | வெற்றி வாரம் 5361
25 28 40 77 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,511,527.20
21734

சசிரி — DLB
வெற்றி வாரம் 1030 | சீட்டிழுப்பு திகதி 22.06.2026 | திங்கட்கிழமை
27 31 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,852,760.00

ராசி — DLB
சீட்டிழுப்பு வாரம் 4912 | சீட்டிழுப்பு திகதி 22.06.2026 | தினம் திங்கட்கிழமை
15 55 59 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,652,104.40

ஜயோதா — DLB
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 39 27 49 55 73
சீட்டிழுப்பு இலக்கம் 2376 | 22.06.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.299,859,140.00

அத கோடிபதி — ADA KOTIPATHI — DLB
திங்கட்கிழமை | வெற்றி வாரம் : 3026 | சீட்டிழுப்பு திகதி :2026.06.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,181,920.80
22 34 61 76 Q


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்



## தம்பிஐயா தங்கராசா (பாலர்)

எழுமட்டுவாள் விழுபளையைப் பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா தங்கராசா (பாலர்) அவர்கள் கடந்த (20.06.2026) சனிக்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் ஜெயலச்சுமி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, செல்லம்மா, மாரியம்மா, சிவபாக்கியம், சுப்பிரமணியம், சுந்தரம், கந்தசாமி மற்றும் சிவராமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மாலினி, பாரதி, ஜெயந்தி, தர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தயா மற்றும் சிவகரன், ஜெயா, சுதா ஆகியோரின் அன்பு மாமனும் மாறன், நிவேதன், சஞ்ஜீவன், தாட்ஷா, சியான், சகானா, சந்தியா, லச்சு, தனிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் தீரன், ருத்ரன், டியா, றியான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2026) செவ்வாய்க் கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விழுபளை இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உசன்,
மிருசுவில்.

தகவல் : குடும்பத்தினர்
077 618 6904

(2444)

இரசாயனவியல்
தனியாக, குழுவாக வகுப்புக்கள்
2028, 2027 &
Paper Class
(2443)
MR.T.Sivayogalingam BSc PGDE
தொல்புரம் கிழக்கு
077 413 3738

## மாணவர் பாராளுமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் சிறப்புற இடம்பெற்று வரும் மாணவர் பாராளுமன்றின் கன்னி அமர்வானது இன்று(23) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ம-7)

வெறுப்பு யாருக்கு எதிராகவும் திரும்பலாம்
நினைவில் கொள்ள :
நீங்கள் வெறுப்பூட்டும் தகவலை பகிரும் போது

நாளை அதே வெறுப்பின் இலக்காக நீங்களும் மாறலாம்.

நிகழ்நிலையில் உள்ள தீங்கு விளைவிக்கும் கதைகள் பெரும்பாலும் கோபம், பயம் மற்றும் சமூகப் பிரி வினையை உருவாக்கும் அரசியல் அல்லது தனிப் பட்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகின்றன.

அதை தொடர்ந்தும் பரப்பாதீர்கள்.
வெறுப்பை அதன் முளையிலேயே கிள்ளி எறியுங்கள்.


இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

(7775)

வைத்தியம்
கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் |
Gastritis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான
மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால்
ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(7905)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# மரண அறிவித்தல்



மலர்வு
18.01.1932

உதிர்வு
20.06.2026

## சங்கரப்பிள்ளை அம்மையப்பர்

(அகில இலங்கை சமாதான நீதவான்,
முன்னாள் எழுதுவினைஞர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம்,
ஓய்வு பெற்ற ஆசிரியர் – யா/ வட்டு இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பரந்தன் குமரபுரம் மகா வித்தியாலயம்,
கிளிநொச்சி மகா வித்தியாலயம்,
ஓய்வுபெற்ற உப அதிபர் – யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் நீராவியடிப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வடக்கு வீடு அராலி தெற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை அம்மையப்பர் அவர்கள் கடந்த 20.06.2026 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் காரைக்காலம்மையார் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ப்ர்வதவர்த்தினி ஆகியோரின் அன்பு மருமகனும் சிதம்பரவல்லி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அன்னபூரணி, காலஞ்சென்ற சம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற வைத்திலிங்கம், மேரி, காலஞ்சென்ற மங்கையற்கரசி, காலஞ்சென்ற அரிச்சந்திரன், சங்கரப்பிள்ளை, அபிராமி, குமாரசாமி, சிவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சந்திரா, சிவகுமாரன், சித்திரா, கௌரி, காலஞ்சென்ற சிவநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபால் சங்கரப்பிள்ளை, தயாபரி, சர்வானந்தன், தேவசேனாதிபதி ஆகியோரின் அன்பு மாமனாரும் விநோதன், வாணி - நீல், அரன், சிவகரன், சிவஜீவன் - ஜயனி, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆஷா, டிலான் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.06.2026) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10.30 மணியளவில் அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

வடக்கு வீடு,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

(7894)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media